## தேனி மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

(13-07-2016 – 17-07-2016)

**இணைந்து வழங்குபவர்கள்:** இந்திய வானிலை துறை, பிராந்திய வானிலை மையம் சென்னை, ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும் மா.ச.சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

தேதி: 12-07-2016

### கடந்த கால வானிலை 08-07-2016 முதல் 11-07-2016 வரை

| காரணிகள் | கடந்த கால வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 15.5 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 36-38 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 27-28 |
| மேக மூட்டம் | 4-7 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 43-54 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி) | 22-32 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை 17-07-2016 - 8.30 மணி நேரம் வரை

| காரணிகள் | 13.07.16 | 14.07.16 | 15.07.16 | 16.07.16 | 17.07.16 |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 3 | 4 | 3 | 15 | 45 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 23 | 23 | 23 | 23 | 23 |
| குறைந்த பட்ச வெப்பநிலை(செ) | 18 | 18 | 18 | 18 | 18 |
| மேக மூட்டம் | 7 | 7 | 7 | 7 | 7 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 83 | 83 | 83 | 83 | 83 |
| குறைந்த பட்ச ஈரப்பதம்(சதவீதம்) | 75 | 75 | 75 | 75 | 75 |
| காற்றின் வேகம்(கி.மீ /மணி ) | 7 | 7 | 7 | 7 | 7 |
| காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

### குறுஞ்செய்தி

- அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை: லேசான முதல் மிதமான வரை மழை பெய்ய வாய்ப்புள்ளது. வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும்.

### எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்

**பயிர்: காய்கறி பயிர்கள், வெங்காயம், வாழை மற்றும் கரும்பு**

**பருவம்: வெங்காயம்: வளர்ச்சி பருவம்**

- 150 நாட்கள் வயதுடைய கரும்புக்கு தோகை உரிப்பதன் மூலம் முன் பருவ நடப்பட்ட கரும்பில் துளைப்பான் பூச்சியின் தாக்கத்தை குறைக்க வேண்டும்.
- பூக்கும் மற்றும் காய்க்கும் பருவத்தில் உள்ள காய்கறி பயிர்களுக்கு வெப்பநிலை அதிகமாக காணப்படுவதால் நுண்ணூட்டத்தை தண்ணீர் வழி மற்றும் இலை வழியாக தெளிக்கலாம்.
- மழை பெய்ய வாய்ப்பு இருப்பதால் மழை நீரை வீணாகாமல் பயன்படுத்த தென்னை மரங்களை சுற்றி 5 அடி தூரத்தில் மண் கரை போட வேண்டும்.
- விவசாயிகள் தங்களுடைய கொட்டகை மற்றும் அதன் சுற்றுப்புறங்களைத் தண்ணீர் தேங்காமல் உலர்ந்து வைப்பதால் கால்நடைகளுக்கு ஏற்படும் குளம்பு அழுகல் நோய் மற்றும் ஈ மற்றும் கொசுக்களின் பெருக்கத்தை தடுக்கலாம்.